This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

www.writersujatha.com

# கலைந்த பொய்கள்

ஒன்று இரண்டு... இருபது நிமிர நிமிர கட்டடத்தின் மாடிகள் கணக்கில்லாமல் மேற்சென்று மேகத்தை விரும்பின. பர்ஸ்ப்பெக்டிவ் அவசரத்தில் சுருக்கி, பெங்களூரின் நீல வானத்தைக் குத்திப் பார்க்கும் கான்க்ரீட் சாக்லேட். ஆயிரம் கண்ணாடி ஜன்னல்களில் சிர்ரஸ் மேகத் தீற்றல்கள். ரேவதி கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டாள். அப்பாவின் கடிகாரம். அப்பாவுக்காகத்தான் இப்போது இந்த பிரம்மாண்ட வாசல் படியை மிதிக்கிறாள். பத்து மணிக்கு வரச் சொல்லியிருக்கிறார்கள். ரேவதி ஒன்பதரைக்கே வந்துவிட்டாள். பஸ்ஸ§க்காகக் காத்திருக்க வேண்டிய சமயத்தை சரியாகக் கணக்கிட்டு ஆறு மணிக்கே எழுந்து, குளித்து அப்பாவின் படத்தை ஒருமுறை நமஸ்காரம் பண்ணிவிட்டு, தன் சீலைகளிலேயே உன்னதமான அந்த லேசான ரத்தம் கலந்த பிங்க் நிற ஸாரி அணிந்து கொண்டு படிப்படியாக மேலே சென்றாள். ஸாரியை சரியாக்கிக் கொண்டாள். எங்கோ பின்புறத்தில் லேசாக உள் பாவாடை தெரிகிறதோ என்று உள்ளுணர்வு உறுத்த, சற்று நின்று தழைத்துக் கொண்டாள்; முகத்தில் வியர்வையை துடைத்துக் கொண்டாள். மிதியடியில் ஆர்கே என்ற எழுத்துக்கள் அவளை வரவேற்றன. இத்தனை பெரிய கம்பெனிக்கு இத்தனை சிறிய போர்டா!

"எஸ் ப்ளீஸ்!" – வரவேற்பில் இருந்த பெண் அவளை மைக்ரோ செகண்டில் ரேவதியின் சமூக நிலைமை, அந்தஸ்து தோற்றத்தில் உள்ள குறை எல்லாவற்றையும் ஆராய்ந்தாள்.

"என் பெயர் ரேவதி" – ஆர்டரைக் காட்டினாள்.

"ஓ நீங்கதானா! வெல்கம்' என்று உடனே மலர்ந்து "மிஸ்டர் விக்ரம், உங்களுக்காகக் காத்திருக்கார். ரூம் நம்பர் 306. மூன்றாவது மாடி. லிஃப்டில் போங்கள்."

கடிதத்தைத் திருப்பிக் கொடுக்கும்போது அவள் பார்வை ரேவதியின் மேல் சற்றுப் பொறாமையுடன் ஒரு கணம் தங்கியது.

லிஃப்டில் மெலிதான பாப் சங்கீதம் கேட்டது. எதிரே கண்ணாடியில் மறுபடி ரேவதி. தன்னைப் பார்க்க விருப்பமில்லாமல் வெற்றுப் பார்வை பார்த்தாள்.

ஐஸ்க்ரீம் வர்ண கார்ப்பெட்டை மிதிப்பதற்கே தயக்கமாக இருந்தது. ஏர்கண்டிஷனரின் குரல் சன்னமாகக் கேட்டு கொண்டிருக்க, தயக்கத்துடன் 306க்குச் சென்று லேசாக தட்டினாள்:

"எண்டர்."

கதவு எப்படித் திறக்கும் என்று தெரியவில்லை தள்ளிப் பார்த்தால் டைட்டாக இருந்தது.